RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s-222926

# மணிமேகலையின் உளவியல் பண்புகள்

பி. சுகன்யா [அ, *]

[அ] தமிழ்த்துறை, கதிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641062, தமிழ்நாடு, இந்தியா.

# Psychological Elements in Manimegalai

P. Suganya [a, *]

[a] Department of Tamil, Kathir College of Arts and Science, Coimbatore-641062, Tamil Nadu, India

* Corresponding Author:
suganyap7190@gmail.com

Received: 19-09-2022
Revised: 10-11-2022
Accepted: 17-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

Manimegalai is an epic and the protagonist of the text is Manimegalai. Madhavi's daughter was ordained as a Buddhist monk according to her mother's wishes. She tries to prevent her mind from going to her love Udayakumaran due to her previous birth. Later, she became a Buddhist monk according to her own will and lived with the duty of relieving people's hunger. Many deities and saints like Manimegalai Deivam, Sampathi Deivam Kandipavai, Aravanavadis, Samayakanakkar, Buddhadevan etc. refines the mind of Manimegalai. Their austerities help Manimegalai, who took asceticism at a young age, not to indulge in sensuality. Mantras that take other forms also lend a helping hand to Manimegalai. Finally, she propagates Buddhism. In this article it can be seen that Manimegalai's mindset is created based on virtue.

**Keywords:** Manimegalai, Sangam Literature, Udayakumaran, Buddhism

## முன்னுரை

இலக்கியம் மனித வாழ்க்கையை பிரதிபலிக்கின்ற ஓர் படைப்புக் கருவூலம் ஆகும். இது மனித வாழ்க்கையின் வெளிப்பாடு, மனிதமன எண்ணங்களே மனத்தின் செயல்பாடுகளை மையமாகக் கொண்டது. அதில் சிந்தனை, நினைவு, கருத்து, உணர்ச்சி ஆகியவை விளைகின்றன. இவற்றின் விளைவால் மனிதனின் செயற்பாடுகள் பல்வேறாக நிகழ்கின்றன. மனிதனுக்கு மனிதன் சொல்லும் செயலும் வேறுபடுவதற்குக் காரணம் மனங்களில் ஏற்படுகின்ற எண்ண அலைகளின் வேறுபாடே ஆகும். வேறுபாடுடைய சிந்தனைப் போக்குகள் ஒன்றோடு ஒன்று இணைந்தோ அல்லது பிரிந்தோ செயல்படுவதில் சமுதாயச் சிந்தனைகள் உருவாகின்றது. தனிமனிதச் சிந்தனைகள், சமுதாயச் சிந்தனைகள் இரண்டும் இணைந்து மனிதனின் வாழ்வியல் கூறாக திகழ்கின்றது. இவ்வாறு மணிமேகலைக் காப்பியத் தலைமை மாந்தரான மணிமேகலையின் உளவியல் பண்பு குறித்து இவண் காண்போம்.

## மணிமேகலையின் ஆளுமைப்பண்பு

மணிமேகலை அழகும் இளமையும் வாய்ந்தவள். தான் பிறந்தது கணிகையர்குலம் என்றாலும் அதை மறந்து உயிரின் சிறந்த பண்பு அன்பு செலுத்துதல் என்பதை கடமையாக கொண்டு வாழ்ந்தவள். மாதவியும் மணிமேகலையை மரபு வழியான கலையில் ஈடுபடுத்தாமல் அன்பில், அறத்தில் திளைக்கக் கூடிய மாண்புக்குரியவள். மணிமேகலை புத்த நெறியில் பெண்மையும் துறவு கொண்டு பற்றற்ற

வாழ்க்கை வாழவியலும் என்பதை நிரூபித்துள்ளாள். மாதவியின் மகளாகப் பிறந்தாளும் கண்ணகியின் கற்புநெறியை ஒத்தத் தன்மையுடையவள் என்பதை,

"மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை

அருந்தவப் படுத்தலல்ல தியாவதும்

திருந்தாச் செய்கைத்தீத் தொழிற் படாஅள்" (Chithalai Saathanar, 2010)

இவ்வடிகள் வாயிலாக அருந்ததியின் கற்புக்கு இணையான கண்ணகியின் கற்பிற்கு நிகரான கற்பினைப் பெற்றவள் மணிமேகலை என்பதை அறியமுடிகின்றது. அவளது வாழ்வில் ஏமாற்றமும் மனநிம்மதியற்ற செயல்கள் நிகழ்ந்தாலும் பற்றற்ற உள்ளம் ஏற்படும்போது எல்லாம் புதுமையாக மாற்றும் சக்தி பிறக்கும் என வாழ்ந்து காட்டியவள் என்பதை மணிமேகலைக் காப்பியம் வழி அறியமுடிகின்றது.

## சிந்தனைத்திறன்

சிந்தனைத்திறன் என்பது ஆறறிவு உடைய மனிதருக்கே உரியதாகும். மனிதனுக்கு ஏற்படக்கூடிய இன்னல்களுக்கு உரிய தீர்வு காண அவனது சிந்தனைத்திறன் உதவுகிறது. மணிமேகலையும் தனக்கு ஏற்பட இருந்த பெரும்பான்மையான சிக்கல்களுக்குத் தன் சிந்தனைத் திறனால் தீர்வு காண்கிறாள். உதயகுமரன் தன்னை அடைவதற்காக காத்திருப்பதனை அறிந்த மணிமேகலை தன் சிந்தனைத்திறனால் மந்திரம் கூறி காயசண்டிகை வடிவம் கொள்கிறாள்.

"மாய விஞ்சை மந்திரம் ஓதிக்

காயசண்டிகையெனுங் காரிகை வடஏத்தி

மாய விஞ்சை மந்திரம் ஓதிக்

காயசண்டிகையெனுங் காரிகை வடிவாய்

மணிமேகலை தான் வந்து தோன்ற" (Chithalai Saathanar, 2010)

என்ற அடிகள் மணிமேகலை உதயகுமரனிடமிருந்து தப்பிக்க மேற்கொண்ட உத்தியை விளக்குகின்றன. இதன் வழி தனக்குக் கிடைத்த வேற்று வடிவம் கொள்ளக்கூடிய வரத்தினை உரிய நேரத்தில் பயன்படுத்திய மணிமேகலையின் சிந்தனைத்திறனை அறியலாகின்றது.

## சொல்திறன்

மணிமேகலை அனைவரையும் கவரக்கூடிய திறமையான சொல் திறன் பெற்றவளாக திகழ்கிறாள். உதயகுமரனிடம் இளமை நிலையில்லாதது எனக் கூறியதோடு மட்டும் அல்லாமல் ஒரு மூதாட்டியின் உருவத்தைச் சுட்டிக் காட்டி புறஉருவம் அழிவையே தரும் என நயம்படக் கூறும் தன்மை அவளது சொல்திறனை விளக்குவதாக அமைந்துள்ளன.

"நரைமூதாட்டி ஒருத்தியைக் காட்டித்

தண்ணறல் வண்ணந் திரிந்துவே றாகி

தூசினும் மணியினுந் தொல்லோர் வகுத்த

வஞ்சந் தெரியாய் மன்னவன் மகனென

விஞ்சை மகளாய் மெல்லிய லுரைத்தலும்" (Chithalai Saathanar, 2010)

என்ற அடிகள் வாயிலாக மணிமேகலை இளமைப்பருவம் நிலையில்லாதது என்பதை எடுத்துரைத்து காமத்தினை நீக்குவதோடு மட்டுமல்லாமல் பிறருக்கு அறம்புரிவதே நன்மை பயக்கும் என்பதனை உணர்த்தக்கூடிய சொல்வளத்தினைக் கொண்டவளாகத் திகழ்வதைக் காணமுடிகின்றது.

## செயல்திறன்

தவறு செய்தவர்களைத் தண்டிக்கும் பொருட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட கைதிகளுக்கு உணவு வழங்கப்படாமல் கொடுமைக்குள்ளாயினர். அதனை அறிந்த மணிமேகலை சிறைச்சாலைக்குச் சென்று சிறையில் உள்ளோரை விடுவித்து அச்சிறைச் சாலையை அறக்கோட்டமாக மாற்றுவதற்கு அனுமதி பெறுகின்றாள். இதனால் குற்றவாளிகள் நிறைந்த சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக மாற்றம் பெறுகிறது. சிறைச்சாலையில் அடிமைப்பட்டு இருந்த மக்களுக்கு பசியை நீக்கும் விதமாக மணிமேகலையின் செயல் ஊக்கி செயல்படுகிறது. அவளது வேண்டுகோளுக்கு ஏற்ப கிள்ளிவளவன் சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்றிய செயலினை,

"அருஞ்சிறை விட்டாங் காயிழை உரைத்த

பெருந்தவர் தம்மாற் பெரும்பொரு ளெய்தக்

கறையோ ரில்லாச் சிறையோர் கோட்டம்

அறவோர்க் காக்கினன் அரசாள் வேந்தென்" (Chithalai Saathanar, 2010)

என்ற அடிகளின் வழி அறியமுடிகிறது. இதன்வழி இயல்பிலேயே எந்த உயிரும் துன்பம் அடையக்கூடாது என்ற நல்ல குணத்தை உடையவளாக மணிமேகலை அடையாளப்படுத்தப் படுவதை அறிய முடிகிறது. மேலும் ஒரு நாட்டை ஆளும் மன்னன் என்பதை அறிந்தும் தன் மனதில் பட்ட கருத்தினை அவருக்கு எடுத்துரைக்கக் கூடிய செயல்திறன் மிக்கவளாக விளங்குவதைக் காணலாம்.

## விடாயியக்கம்

விடாயியக்கம் குறித்து "ஊக்கியால் தூண்டப்பட்ட ஒருவன் எளிதில் அதற்காக நடத்தையைக் கைவிடமாட்டான். இதுவே விடாயியக்கம் எனப்படும்" என்று குறிப்பிடுவர் (Jeya Siri, 2012). பரத்தையர் குலத்தில் தோன்றிய மாதவியின் மகளாகிய மணிமேகலை தாயின் விருப்பப்படி துறவுக்கோலம் பூண்கிறாள். உதயகுமரன் தன் மீது காமமுற்று விளங்குவதை அறிந்த போதிலும் தன் துறவு வாழ்க்கையை விட்டு மீளாமல் பல சமயக் கருத்துக்களை அறிந்து தன் பாவத்திறன் அழித்து புத்தனின் திருவடியே சரணம் என்று தான் கொண்ட கொள்கையில் வலுவாமல் நிற்கின்றாள். இதனை,

"கருதி யுய்த்து மயக்கங் கடிக

இந்நுல் வகையான மனத்திரு ணீங்கென்று

முன்பின் மலையா மங்கல மொழியின்

ஞான தீப நன்கனங் காட்டத்

தவத்திறம் பூண்டு தருமங் கேட்டுப்

பவத்திற மறுகெனப் பாவை நோற்றனளென்" (Thandapani Durai, 2005)

என்ற அடிகள் மணிமேகலையின் உறுதியை விளக்குகின்றன. மணிமேகலை புத்ததேவனின் அருளினால் தன் முற்பிறப்பினை அறியக்கூடிய ஆற்றல் பெறுகிறாள். முற்பிறவியில் உதயகுமரன் தன் கணவன் என்பதனையும் உணர்கிறாள். அவன் தன் மீது காதலுற்றவனாய் திகழ்வதை அறிந்தும் அவன் மீது விருப்பம் கொள்ளாமல் தன்னுடைய துறவு நெறியை செம்மையுறக் கையாள விரும்புகிறாள். இஃது அவளின் விடாயியக்கத்தின் வெளிப்பாடே எனலாம்.

## மாறுபடும் இயல்பு

மாறுபடும் இயல்பினை "ஊக்கியால் தூண்டப்பட்ட ஒருவன் தன் குறிக்கோளை அடைவதற்கு ஒரே மாதிரியான நடத்தையில் ஈடுபடாமல் பல்வேறு செயல்களின் மூலம் குறிக்கோளை அடைய முயல்கிறான். இதை மாறுபடும் இயல்பு என்று உளநூலார் உரைப்பர்" என்று குறிப்பிடுவர்.

மணிமேகலை அவளது குலத்தொழிலை மேற்கொள்ள வேண்டும் என்று சித்ராபதி விரும்புகின்றாள். அவளது விருப்பத்தை ஏற்க விரும்பாத மணிமேகலை துறவு அறத்தை மேற்கொள்ள முனைகிறாள். கோவலன், கண்ணகியின் மரணச் செய்தியை அறிந்து துன்பமுற்று வருந்துகிறாள். இவ்வுலகப் பற்றினால் துன்பம் வரும் என்பதை அறிந்து புத்தனது திருவடியை விரும்பி துறவு கொள்கிறாள். புத்த மதக் கொள்கையின்படி பிற உயிர்களுக்கு துன்பம் விழைவிக்கக்கூடாது என்ற அறச்சிந்தனை மிக்கவளாகவும், தன்னால் முடிந்த உதவியைப் பிறருக்கு செய்யக்கூடிய இயல்பினளாகவும் தன் இலக்கினை அடையக்கூடிய இயல்பினளாகத்திகழ்கிறாள் என்பதை,

“ஆசனத் தேற்றி யறுசுவை நால்வகைப்

போனக மேந்திப் பொழுதினிற் கொண்டபின்

பாசிலைத் திரையலும் பளிதமும் படைத்து

வாய்வ தாகவென் மனப்பாட் டறமென

மாயைவிட் டிறைஞ்சினள் மணிமேகலையென்” (Thandapani Durai, 2005)

இப்பாடல்அடிகளின் வாயிலாக மணிமேகலை தான் கொண்ட குறிக்கோளை அடைவதற்காக பல்வேறு உத்திகளைக் கையாளுகின்றாள். உயிர்களின் பசிப்பிணியைப் போக்குவதற்காக சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்றிய இயல்பினள். தான் பெற் மந்திரத்தினால் மாற்றுஉருவம் பெற்று தான் கொண்ட குறிக்கோளாகிய பசிப்பிணி நீக்குதல், பிற உயிர்களுக்கு துன்பம் செய்யாமை என்ற தான் கொண்டகொள்கையில் மாறுபடாஇயல்பு பெற்று விளங்குவதனை அவளது செயல்பாடுகள் விளக்குகின்றன.

## சூழ்நிலைக்கு ஏற்றபடி விழிப்பாக இருத்தல்

இராசமாதேவி தன் மகன் உதயகுமரன் இறப்பிற்கு மணிமேகலையே காரணம் என்று எண்ணுகிறாள். அதனால் அவளுக்குப் பலவித இன்னல்களை ஏற்படுத்துகிறாள். மணிமேகலையை சிறையில் அடைக்கிறாள். அவளது அறிவை மருந்தினால் வேறுபடுத்த முனைகிறாள். கல்லா இளைஞன் ஒருவனால் அவளது நடத்தைக்கு கலங்கம் கற்பிக்க விழைகிறாள். பொய்யான நோயைக் கூறி அவளை சிறையில் அடைக்கிறாள். ஆனால் மணிமேகலை எல்லா சூழ்நிலைகளையும் விழிப்போடு இருந்து தனக்கு ஏற்பட்ட துன்பங்களிலிருந்து தன்னைக் காத்துக்கொள்கிறாள். இதனை,

“அறிவு திரித்துஇவ் அகல்நகர் எல்லாம்

எறிதரு கோலம் யான் செய்குவல்

உய்யா நோயின் ஊண் ஒழிந்தனள் என

பொய்ந் நோய் காட்டிப் புழுக்கறை அடைப்ப

ஊண்ஒழி மந்திரம் உடைமையின் அந்த

வாள்நுதல் மேனி வருந்தாது இருப்ப” (Thandapani Durai, 2005)

என்ற அடிகள் விளக்குகின்றன.

தன் உணர்ச்சிகளைப் பிறர்க்குப் புலப்படுத்துதல்

மணிமேகலை புத்தசமயத்தைச் சார்ந்திருந்தாலும் முன்விினியின் காரணமாக அவளுடைய மனம் உதயகுமரன் பின்னால் செல்கிறது. அவன் காஞ்சனனால் கொலையுண்ட போது அவள் தன் உணர்ச்சிகளை வெளிக்காட்டிப் புலம்புகிறாள். இதனை,

“திட்டிவிடம் உண நின் உயிர் போம்நாள்

கட்டு அழல் ஈமத்து என்உயிர் சுட்டேன்

உவவன மருங்கில் நின்பால் உள்ளம்

தவிர்விலேன் ஆதலின் தலைமகள் தோன்றி

யான் நினக்கு உரைத்துநின் இடர் வினை ஒழிக்கக்

காயசண்டினை வடிவு ஆனேன் காதல

வைவாள் விஞ்சையன் மயக்கு உறு வெகுளியின்

வெவ் வினை உருப்ப விளிந்தனையோ என

விழுமக் கிளவியின் வெய்து உயிர்த்துப் புலம்பி

அழுதனள் ஏங்கி அயாஉயிர்த்து எழுதலும்" (Thandapani Durai, 2005)

என்ற பாடலடிகள் மணிமேகலை தன் உணர்வுகளை வெளிப்படுத்தும் தன்மையை அறியமுடிகின்றன.

## பிறர் மேல் காரணமற்ற வெறுப்பு இன்மை

மணிமேகலைப் பாத்திரம் வெறுப்பு இல்லாத அன்பு உடைய பாத்திரமாக அமைகிறது. தன்னைப் பின் தொடர்ந்து வந்த உதயகுமரன் மீது அவள் கோபம் கொள்ளவில்லை. தன்னைப் பரத்தமைத் தொழிலில் ஈடுபடுத்த முயன்ற சித்ராபதி மீதும் அவள் எத்தகைய கோபம் உடையவளாக இல்லை. உதயகுமரனின் மரணத்திற்குத் தன்னைக் காரணமாக எண்ணி தனக்குத் துன்பம் விளைவித்த இராசமாதேவி மீதும் அவள் கோபம் கொள்ளவில்லை.

"ஆங்கு அவள் தொழுதலும் ஆய்இழை பொறாஅள்

தான் தொழுது ஏத்தி தகுதி செய்திலை

காதலற் பயந்தோய் அன்றிம் காவலன்

மாபெருந்தேவி என்று எதிர் வணங்கினள்" (Thandapani Durai, 2005)

என்ற பாடல் அடிகள் தனக்கு துன்பம் தந்த இராசமாதேவி மீதும் மணிமேகலை கோபம் கொள்ளாமையைப் புலப்படுத்துகின்றன.

## தன்னிலை அறிவு

மணிமேகலை தன்னிலை அறிவு கொண்டவளாகத் திகழ்கின்றாள். புத்த பீடிகையைக் கண்டு தன் பிறப்புனை அறிகிறாள். முற்பிறவி மட்டும் அல்லாது நிகழ்காலத்திலும் நடைபெற இருக்கும் செயலையும் முன்னரே அறியக் கூடிய தன்மை பெற்றவளாக விளங்குகிறாள். உதயகுமரனின் பழம்பிறப்பினை அறிந்ததோடு மட்டும் அல்லாமல் தன்னிடம் உள்ள அமுதசுரபியால் பிறர் பசி போக்கிய பெருமையினையும் பெறுகிறாள். இதனை,

"சினமா சொழித்து மனமாசு தீர்த்தாங்கு

அறச்செவி திறந்து மறச்செவி யடைத்துப்

பிறவிப்பிணி மருத்துவன் இருந்தற முரைக்கும்

திருந்தொளி யாசனஞ் சென்றுகை தொழுதி

அன்றைப் பகலே உன்பிறப் புணர்ந்தீங்கு

இன்றியா னுரைத்த உரைதெளி வாயனெச்

சாதுயர் கேட்டுத் தளர்ந்துகு மனத்தேன்" (Thandapani Durai, 2005)

என்ற அடிகளின் மூலமாக மணிமேகலாதெய்வம் தோன்றி மணிமேகலையின் முற்பிறவியினை அறிவித்து அவளைச் செம்மைப்படுத்திய தன்மையை அறியலாகின்றது. இதன்வழி மணிமேகலை தான் கொண்ட சமயத்திலும் தன்னுடைய சொந்த வாழ்விலும் தன்னிலை அறிவு பெற்றவள் என்பதை அறிய முடிகின்றது.

## தூண்டல் உணர்வு

தூண்டல் என்பது ஒருவரின் செயலைத் தூண்டிவிடக்கூடிய ஓர் உணர்வாகும். தூண்டல் என்பது ஓர் உறுப்பைச் செயல்படுத்த வைப்பதாகும். இவ்வுணர்வை நடத்தையின் எழுச்சி, இயக்கம், தொடரோட்டம் எனலாம். "மனதின் அகப்புறத் தேவைகளின் வெளிப்பாடே செயல் தூண்டல் உணர்வாகும்" என்பர் (Aram, 1966). மணிமேகலை தான் மட்டும அல்லாமல் பிறரையும் நல்அறம் மேற்கொள்வதற்கான புறத்தூண்டல் காரணியாகச் செயல்படுகிறாள் என்பதை,

"துயர்நிலை யுலகங் காத்த லின்றிநீ

உயர்நிலை யுலகம் வேட்டனை யாயின்

இறுதி யுயர்க ளெய்தவு மிறைவ

பெறுதி விரும்பினை யாகுசை யன்றே

தன்னுயிர்க் கிரங்கான் பிறவு யிரோம்பு

மன்னுயிர் முதல்வ றைமுமீ தன்றால்

மதிமா றோர்ந்தனை மன்னவ வென்றே

முது மொழி கூற முதல்வன் கேட்டு" (Thandapani Durai, 2005)

என்ற அடிகளின் வாயிலான மணிமேகலையின் பேச்சுத்திறனால் புண்ணியஅரசனின் ஊக்கி தூண்டப்படுவதனை அறிய முடிகிறது. புண்ணிய அரசன் தான் ஆண்டு வந்த தீவினை அமைச்சரிடம் ஒப்படைத்து விட்டு புத்ததேவனின் அறக்கருத்துக்களை விரும்பி அவரைச் சரணடைகிறான். இதன் வாயிலாக மணிமேகலை புண்ணிய அரசனின் செயல்திறனைத் தூண்டக்கூடிய ஊக்கியைப் பெற்றவள் என்பதை அறியமுடிகின்றது.

## முடிவுரை

இரட்டைக் காப்பியத் தலைமைப் பெண் மாந்தரான மணிமேகலையின் உளவியலை ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது. மாதவியின் மகள் மணிமேகலை. தன் தாயின் சொல் கேட்டு கணிகையர் குலத்தொழிலை விடுத்து பௌத்த சமயத் துறவியாக துறவு வாழ்வை மேற்கொள்கின்றாள். முற்பிறப்பின் வினையால் உதயகுமரன் மீது அன்பு கொண்டவள். சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றியவள். உயிர்களிடத்தில் மிகுந்த இரக்க குணம் கொண்டவள். பசிப்பிணி என்னும் கொடிய நோயை அமுதசுரபியின் உதவியால் போக்க முனைந்தவள். இராசமாதேவியின் மகன் இறப்பிற்கு மணிமேகலையே காரணம் என்ற தவறான புரிதலினால் மணிமேகலைக்கு பல்வேறு இன்னல்களை ஏற்படுத்துகின்றாள். அத்தகைய துன்பங்கள் யாவற்றையும் தனக்கு கிடைத்த வரத்தின் துணையால் கடந்து வந்த சிறப்புமிக்கவள். பிறசமய கருத்துக்களை ஆராய்ந்து அறிந்து அதன் மூலம் தான் பின்பற்றிய பௌத்த சமயக்கொள்கையே சிறந்தது என்று அதனை பரப்புவதற்காக இளம் வயதிலேயே துறவியாக வாழ்க்கையை வழிநடத்திய தன்மை மிக்கவள். உளவியலார் குறிப்பிடக்கூடிய சூழ்நிலைக்கு ஏற்றபடி விழிப்பாக இருத்தல், அனைவரிடமும் எளிதாகப் பழகுதல், மாறுதல்களை விரும்புதல், எந்த நிலைக்கும் தன்னைச் சரிக்கட்டிக் கொள்ளுதல் போன்ற பண்புகள் மணிமேகலையிடம் பொருந்தி வருவதனைக் காணமுடிகின்றது.

## References

Aram, M. (1966) Psychology of Adolescence, Tamil Veliyetu Kalagam, Chennai, India

Chithalai Saathanar, (2010) Manimegalai, Kizhakku Pathippagam, Chennai, India.

Jeya Siri, S.K. (2012) Veman Tamil Sol Agarathi, Veman Pathipagam, Chennai, India

Thandapani Durai, (2005) Manimekalai Theliurai, Uma Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License